# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
ஆளும்கட்சி / எதிர் கட்சித் தலைவர்கள்,
வார்டு குழுத் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, கோவை மேற்கு,
சிங்காநல்லூர், தொண்டாமுத்தூர்
மற்றும் பேரூர் சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

ந.க.எண் : 1114/ 2011 / எம்சி. 8 நாள் : 11.02 .2011

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற சாதாரணக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக் கூட்டம் வருகின்ற 18.02.2011 வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 1

/உண்மை நகல் /

மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற சாதாரணக் கூட்டம் - பிப்ரவரி 2011

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| | அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி |
| வ.எண் | இ). தீர்மானத்திற்குரிய பொருள் |
| 1 | Jnnurm – பாதாள சாக்கடைத் திட்டம் - சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரினை தனியாருக்கு விற்பனை செய்தல் - கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டது – மாற்றி அமைத்தல் - மாமன்றம் முடிவு செய்தல் - தொடர்பாக. |
| 2 | பணியமைப்பு - வடக்கு மண்டலம் - திரு ஞா. பெர்னாட்ஷா, தேர்ச்சி திறனற்ற பணியாளர் - மதுரை மாநகராட்சிக்கு மாறுதல் கோருதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 3 | கல்விப்பிரிவு - சொந்த கட்டிடம் இல்லாத தனியார் கட்டிடங்களில் வாடகை அடிப்படையில் இயங்கி வரும் ஆரம்பப் பள்ளிகளுக்கு 2010-2011 ம் ஆண்டிற்கு வாடகை வழங்குதல்- மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| 4 | பொறியியல் பிரிவு - வர்ாடு எண்.17 – சிறுபாலம் கட்டுதல் - வர்ாடு எண் 68 - மழைநீர் வடிகால் திரும்பக் கட்டுதல் பணி - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 5 | பொதுப்பிரிவு – பணியமைப்பு - கணக்கு அலுவலர் - பதவி உயர்வு வழங்குதல் - தேர்ந்த பெயர் பட்டியல் (Panel) – மாமன்ற ஒப்புதல் கோருதல் |
| 6 | Jnnurm – ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டம் - கூடுதல் செலவினம் ஏற்றல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 7 | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - சீனிவாசபுரம் காய்கறி மார்க்கெட் - தினசரி வசூல் செய்வதை மாத வாடகையாக மாற்றியமைத்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 8 | தெற்கு மண்டலம் - வருவாய் பிரிவு - ராஜ வீதி முதல் பெரிய கடை வீதி வரை உள்ள இரு சக்கர வாகன நிறுத்துமிடம் - குத்தகை இனத்தில் சேர்த்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 9 | Jnnurm – பில்லூர் I –வது குடிநீர் திட்டம் - கூடுதல் குடிநீர் பெறுதற்கு மின் இணைப்பு பெறுதல் - தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு தொகை செலுத்துதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 10 | Jnnurm – 24 x 7 குடிநீர் திட்டம் - மெஸ்ஸர்ஸ் பிட்சனர் கன்சல்ட்டிங் இன்ஜினியர்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், சென்னை - திருத்திய திட்ட அறிக்கை தயாரித்தல் - கட்டணம் செலுத்துதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |

நன்றியுரை

அ) **திருக்குறள்**

## அல்லல் அருளாள்வார்க் கில்லை வளிவழங்கு
## மல்லன்மா ஞாலங் கரி.

(குறள் 245)

**விளக்கம்**

உள்ளத்தில் ஊறிடும் அருளின் இயக்கத்தினால் துன்பத்தை உணராமல் கடமையாற்றலாம் என்பதற்கு, காற்றின் இயக்கத்தினால் வலிமையுடன் திகழும் இந்தப் பெரிய உலகமே சான்று.

திருவள்ளுவர்

---

ஆ) **தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

## சிறப்புத் தீர்மானம்

இந்திய சுதந்திரப் போராட்ட விடுதலை வேங்கைகளில் தலை சிறந்தவராக திகழ்ந்தவர் மாமன்னர் வீரபாண்டிய கட்டபொம்மன். அந்த மாமன்னரின் பிரதான தளபதியாக திகழ்ந்தவர் மாவீரன் தளபதி சுந்தரலிங்க குடும்பனார்.

தனது உயிரை துச்சமென மதித்து வெள்ளையரை எதிர்த்து களம் கண்டவர். அந்த மாபெரும் வீரன், இந்தியாவின் முதல் மனித வெடிகுண்டாக மாறி, வெள்ளையரின் ஆயுத கிடங்குகளில் உள்ளே குதித்து தன் இன்னுயிர் நீத்தவர். நமது நாட்டை காத்தவர்.

இப்படி பல்வேறு சிறப்புகளை உடைய மாவீரன் சுந்தரலிங்க குடும்பனார் அவர்களின் வெண்கலச் சிலையை 24-வது வார்டு இராமநாதபுரம் தேவேந்திர குலத்தின் அலங்கார மாரியம்மன் கோவில் அருகில் உள்ள திடலில் வைக்க, கோவை மாவட்ட தியாகி சுந்தரலிங்கம் பேரவை விரும்புகின்றது. சிலை பராமரிப்பு, பாதுகாப்பு போன்றவற்றை அவர்களே ஏற்றுக் கொள்கின்றனர். அவர்களின் வேண்டுகோளை ஏற்று மேற்படி இடத்தில் சிலை வைக்க இன்றைய மாமன்றக் கூட்டத்தில் சிறப்புத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமாய் மாமன்ற அனைத்து கட்சித் தலைவர்களின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

## சிறப்புத் தீர்மானம் எண் 1 நாள் 18.02.2011

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

---

05.01.2011 ம் தேதிய மாமன்ற சாதாரணக்கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு மீண்டும் சமர்ப்பிக்கப்படுகிறது.

### பொருள் எண் 1

கோவை மாநகராட்சியில், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் தற்போது அமைக்கப்பட்டு வரும் உக்கடம் மற்றும் நஞ்சுண்டாபுரம் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களுடன், ஒண்டிப்புதூர் பகுதியில் அமைக்கப்படவுள்ள சுத்திகரிப்பு நிலையம் மூலம் சுத்திகரிக்கப்படும் கழிவு நீரினை குடிநீர் அல்லாத பிற பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள சில தனியார் நிறுவனங்கள் இசைவு தெரிவித்து இருந்ததன் பேரிலும், தனியார் தொழிற்சாலைக்கு விற்பனை செய்வதின் மூலம் வருவாய் ஈட்ட வழி செய்யும் வகையிலும், மாநகராட்சியால் விலை நிர்ணயிக்க பொருள் வைக்கப்பட்டதில், வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மானம் எண் 39, நாள் 17.08.2010–ல் ரூ.10.00/1000 லிட்டர் என்ற விகிதத்தில் விற்பனை செய்ய ஒப்புதல் பெறப்பட்டு மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டது.

மாமன்றம் தனது தீர்மான எண். 102 நாள். 29.09.2010ல் ரூ. 20.00/1000 லிட்டர் என்ற விலைவிகிதம் நிர்ணயம் செய்தும், தேவைப்படும் நிறுவனங்கள் தங்கள் சொந்த பொறுப்பில் தேவையான கொள்ளளவு சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரினை எடுத்துக்கொள்ளவும் வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. இதுகுறித்து கழிவு நீரினை பயன்படுத்த விருப்பம் தெரிவித்த நிறுவனங்களுக்கு மன்றத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட விலை குறித்து கடந்த 29.10.2010–ல் கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டது.

கீழ்க்குறிப்பிட்டுள்ள அந்நிறுவனங்கள் தங்கள் சொந்த பொறுப்பில் பைப் லைன் அமைத்து சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரினை பயன்படுத்த எடுத்துச் செல்வதற்கு மாமன்றம் நிர்ணயித்துள்ள தொகை மிகவும் கூடுதலென தெரிவித்து மாமன்றம் நிர்ணயித்துள்ள தொகையினை குறைத்து நிர்ணயம் செய்துதர அதன் எதிரே குறிப்பிட்டுள்ள தேதிகளில் விண்ணப்பித்துள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | கடிதம் பெறப்பட்ட தேதி | தற்சமயம் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் எடுத்துக் கொள்ள உத்தேசிக்கப்பட்ட கொள்ளளவு |
|---|---|---|---|
| 1 | திரு/ள். லார்சன் & டப்ரோ லிமிடெட், மலுமிச்சம்பட்டி, கோவை | 09.11.2010 | 1 எம்.எல்.டி / தினசரி |
| 2 | திரு/ள். தி கோயம்புத்தூர் கோல்ப் கிளப், செட்டிபாளையம் | 16.11.2010 | 4 எம்.எல்.டி / தினசரி |
| 3 | திரு/ள். ரேக்இண்டோ கோவை டவுன்ஷிப் லிமிடெட், பச்சாபாளையம் கிராமம், பேரூர், கோவை | 26.11.2010 | 4 எம்.எல்.டி / தினசரி |
| 4 | திரு/ள். ஷாரதா டெரி புராடக்ட்ஸ் லிமிடெட், நெல்லிதுறை, மேட்டுப்பாளையம் | 29.11.2010 | 10 எம்.எல்.டி / தினசரி |

மாநகராட்சியால் கட்டப்பட்டுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து, தற்போது பெறப்படும் கழிவுநீர் கொள்ளளவிற்கு சுத்திகரிப்பு செய்ய ஆகும் பராமரிப்புக் கட்டணம், மின் கட்டணம் ஆகியவற்றை கருத்தில்கொண்டு கணக்கிடப்பட்டு மீண்டும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மானம் எண் 105 நாள் 22.12.2010ன்படி சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரினை ரூ. 10/1000 லிட்டர் என்ற விலை விகிதத்தில், தேவைப்படும் நிறுவனத்திற்கு சொந்த பொறுப்பில் பைப்லைன் அமைத்து எடுத்துக்கொள்ள விலை நிர்ணயம் செய்து ஒப்புதல் அளித்துள்ளதால், மாமன்றம் தனது தீர்மானம் எண். 102, நாள் 29.09.2010 ல் தீர்மானித்துள்ள விலை விகிதத்தினை மீண்டுமொரு முறை பரிசீலித்து விலை குறைத்து முடிவெடுக்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u> சுத்திகரிப்பு செய்யப்பட்ட கழிவு நீரினை தேவைப்படும் நிறுவனங்கள் தமது சொந்த பொறுப்பில் எடுத்துக்கொள்ள, மேற்படி சுத்திகரிப்பு செய்யப்பட்ட கழிவு நீரின் விலை விகிதத்தினை மாமன்றம் மீண்டுமொரு முறை பரிசீலித்து முடிவு செய்யலாம்.

ந.க. எண். 14353/09/ஜே.ன்.4

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 244 நாள் 18.02.2011</u>

1. சுத்திகரிப்பு செய்யப்பட்ட கழிவுநீரினை 1000 லிட்டருக்கு ரூ. 12/- என்ற விலை விகிதத்தில் அடிப்படை விலை நிர்ணயம் செய்து பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி முறையில் தேவைப்படும் நிறுவனங்களுக்கு வழங்க மாமன்றம் தீர்மானிக்கப்பட்டது.

2. பொருளில் குறிப்பிடப்பட்ட வரிசை எண். 4 தி/ள். ஷாரதா டெரி புராடக்ட்ஸ் லிமிடெட், நெல்லிதுறை, மேட்டுப்பாளையம் நிறுவனம் தவிர பிற நிறுவனங்கள் ஏலம் மற்றும் ஒப்பந்தப் புள்ளியில் கலந்து கொள்ள அனுமதிக்க மாமன்றம் தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 2**

பொருள் - பணியமைப்பு - கோயம்புத்தூர் மாநகராட்சி – திரு ஞா. பெர்னாட்ஷா, தேர்ச்சி திறனற்ற பணியாளர், வடக்கு மண்டலம் - மதுரை மாநகராட்சிக்கு மாறுதல் கோருதல் - தொடர்பாக

--------------------

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்தில், தேர்ச்சி திறனற்ற பணியாளராக பணியாற்றி வரும் திரு. ஞா. பெர்னாட்ஷா அவர்களுக்கு சொந்த ஊர் சிவகங்கை என்றும், தனது வயதான பாட்டி மற்றும் மனைவி குழந்தைகளை கவனித்துக் கொள்ள முடியாத சூழ்நிலை காரணமாகவும், மதுரை மாநகராட்சிக்கு பணிமாறுதல் வேண்டி விண்ணப்பம் செய்துள்ளார்.

எனவே, திரு ஞா. பெர்னாட்ஷா, தேர்ச்சி திறனற்ற பணியாளரை மதுரை மாநகராட்சிக்கு தேர்ச்சி திறனற்ற பணியாளர் பணியிடத்திற்கு ஒருவழி மாறுதல் செய்ய மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். மாமன்ற அனுமதிக்குப் பின் மேற்படி தீர்மானத்தை ஆணையர், மதுரை மாநகராட்சி மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கும் அனுப்பி வைக்கலாம்.

ந.க.எண். 10379/2010/எம்சி. 1

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 245 நாள் 18.02.2011</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 3

சொந்த கட்டிடம் இல்லாத தனியார் கட்டிடங்களில் வாடகை அடிப்படையில் இயங்கி வரும் ஆரம்பப் பள்ளிகளுக்கு 2010-2011 ம் ஆண்டிற்கு வாடகை வழங்கப்பட வேண்டியது ரூ. 33,814/- கீழ்கண்டுள்ளபடி 2 பள்ளிகளுக்கு கட்டிட உரிமையாளர்களுக்கு வழங்க, கல்வி, பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் நிலைக்குழுவின் தீர்மானம் எண் 3 நாள் 6.12.2010ன்படி ஒப்புதல் பெற்று மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது

| வ. எண் | மாநகராட்சி ஆரம்பப் பள்ளியின் பெயர் | மாதந்தோறும் வழங்கப்பட வேண்டிய வாடகை மாதம் ஒன்றுக்கு ரூ | மொத்தம் வழங்கப்பட வாடகை தொகை ரூ | வழங்கப்பட வேண்டிய கட்டிட உரிமையாளர் |
|---|---|---|---|---|
| 1 | சிங்காநல்லூர் (தெற்கு) ஆரம்பப் பள்ளி சிங்காநல்லூர் கோயம்புத்தூர் | 2379/- | ஏப்ரல் 2010 முதல் மார்ச் 2011 முடிய<br>2379x12= 28548/- | தலைவர்,<br>அஸ்தாந்திர கொல்ல சமூக சங்கம்,<br>எண் 1 அஸ்தாந்திர நாயக்கர் வீதி,<br>சிங்காநல்லூர்,<br>கோயம்புத்தூர்-641 005 |
| 2 | சிங்காநல்லூர் (கிழக்கு) ஆரம்பப் பள்ளி சிங்காநல்லூர் கோயம்புத்தூர் | 2633/- | ஏப்ரல் 2010 முதல் மே 2010 முடிய<br>2633x2= 5266/- | தலைவர்,<br>சிங்காநல்லூர் ஆதி திராவிடர் சமூக சேவா சங்கம், சிங்காநல்லூர்,<br>கோயம்புத்தூர்-641 005 |
| | | | 33,814/- | |

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் வழங்கலாம். ந.க.எண் 11446/2010/கே 14

**மாநகர மன்ற தீர்மானம் எண் 246 நாள் 18.02.2011**

கல்வி, பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழுவின் தீர்மானம் எண். 3 நாள் 6.12.10 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 4

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 01.02.2011 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் | விலை குறை-வுக்கு பின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 9180/10/ எம்.டி.2 | வார்டு எண்.68 சம்பத் வீதியில் மழைநீர்வடிகால் புதுப்பித்து மூடுபலகை அமைத்தல் | 26.37 | 31-12-2010 இரண்டாம் அழைப்பு | திரு.எஸ்.ராஜு | 10.00 அதிகம் | 4.90 அதிகம் |
| 2 | 9972/10/ எம்.டி.2 | வார்டு எண்.17 காமராஜ் நகரில் சிறுபாலம் கட்டுதல் | 13.22 | 11-01-2011 மூன்றாம் அழைப்பு | தி/ள் என்.பி.கே. அசோசியேட்ஸ் | 4.86 அதிகம் | 4.77 அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- வரிசை எண்.1 மற்றும் 2-ல் உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 9180/2010/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 247 நாள் 18.02.2011**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 5

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – வகுப்பு III பிரிவு I வகை 1-ல் உள்ள கண்காணிப்பாளர் பதவியிலிருந்து வகுப்பு II வகை 4 –ல் உள்ள கணக்கு அலுவலர் பதவிக்கு பதவி உயர்வு வழங்க தேர்ந்த பெயர் பட்டியல் (Panel) – மன்றத்தின் ஒப்புதலுக்கு

----------

தமிழ்நாடு மாநகராட்சிகள் 1996 ம் ஆண்டு பொதுப்பணி அமைப்பு விதிகள் வகுப்பு III பிரிவு 1 வகை 1 ல் உள்ள கண்காணிப்பாளர் பதவியிலிருந்து வகுப்பு II வகை 3 மற்றும் 4 –ல் உள்ள முறையே கணக்கு அலுவலர் மற்றும் நிர்வாக அலுவலர் பதவிக்கு பதவி உயர்வு வழங்க ந.க.எண். 484/2010/எம்.சி.2 நாள் 15.06.2010 –ல் வெளியிடப்பட்ட கண்காணிப்பாளர் மற்றும் உதவி வருவாய் அலுவலர் பணிமூப்புப் பட்டியலிலிருந்து அரசாணை எண். 237, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள் 26.09.1996-ன்படி, தகுதிபெற்ற கீழ்குறிப்பிட்ட கண்காணிப்பாளர் மற்றும் உதவி வருவாய் அலுவலரின் தேர்ந்த பெயர் பட்டியல் (Panel) மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் | கண்காணிப்பாளராக பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|
| 1 | திருமதி எஸ். சந்திரகாந்தி | 04.02.2009 |
| 2 | திரு டி.ஆர். ரவி | 04.02.2009 |
| 3 | திரு செந்தில்குமார் ரத்தினம் | 26.05.2009 |
| 4 | திருமதி தே. லட்சுமிபிரபா | 26.05.2009 |

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 484/2010/எம்.சி. 2

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 248 நாள் 18.02.2011</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 6

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்தும் பணிக்கு ரூ.96.51 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கைக்கு மத்திய நகர்புற மேம்பாட்டு அமைச்சகம் கடந்த 02-02-2007-ல் ஒப்புதல் வழங்கப்பட்டது. மேற்படி திட்டத்திற்கு அரசாணை 160(டி) ந.நி.மற்றும் குடிநீர் வழங்கல் துறை (மா.ந.-II) துறை நாள் 17-04-2007ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. மத்திய நகர்புர மேம்பாட்டு அமைச்சகத்தின் வழிகாட்டுதலின்படி பகுதி I ன் கீழ் முதற்கட்ட குப்பை சேகரிப்பு பணிகளை (Primary Collection) ரூ.26.91 கோடி மதிப்பீட்டில் இம்மாநகராட்சியால் செயல்படுத்தப்படுத்தவும், பகுதி II ன் கீழ் நவீன குப்பை மாற்று நிலையங்கள் நிறுவுதல், இரண்டாம் கட்ட குப்பை அகற்றும் பணிகள் மேற்கொள்ளுதல், நவீன உரக்கிடங்கு நிறுவுதல் மற்றும் சுற்றுச்சூழல் பாதிக்காத வண்ணம் சுகாதார கட்டமைப்பு நிறுவுதல் (Modern Transfer Station, Secondary Transportation, Compost Plant & Sanitary Land Fill) போன்ற பணிகளை ரூ.69.60 கோடி மதிப்பீட்டில் தனியார் பங்களிப்புடன் (Public Private Partnership Arrangement) செயல்படுத்தவும் மாநகர மன்ற தீர்மான எண் 15 நாள் 31-05-2007-ல் ஒப்புதல் பெறப்பட்டது. இதனைத் தொடர்ந்து அரசாணை எண் 613 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.-II) துறை நாள் 20-12-2007ல் மேற்படி திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினை தனியார் பங்களிப்புடன் செயல்படுத்த திருத்திய நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

பகுதி II ன் கீழ் குறிப்பிட்டுள்ள பணிகளை தனியார் பங்களிப்புடன் செயல்படுத்த ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு மேற்படி பணி தி/ள். UPL – BEIL (Consortium), மும்பை நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ள மாமன்ற தீர்மான எண் 189 நாள் 30-10-2007-ல் ஒப்புதல் பெறப்பட்டு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. அரசாணை எண் 76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (மா.ந.-II) துறை நாள் 09-05-2008-ல் மேற்படி திட்டத்திற்கு தேவைப்படும் மாநகராட்சிக்கு சொந்தமான நிலங்களை மேற்கூறிய நிறுவனத்திற்கு 20 ஆண்டுகளுக்கு குத்தகை அடிப்படையில் ஒப்படை செய்ய அனுமதி பெறப்பட்டது. ஒப்பந்ததாரர் தற்சமயம் மூன்று குப்பை மாற்று நிலையங்கள் கட்டி முடித்து இரண்டாம் கட்ட குப்பை அகற்றும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் ஒண்டிப்புதூர் மற்றும் கவுண்டம்பாளையம் பகுதிகளில் ஏற்கனவே இருந்து வந்த பழைய குப்பைக்கிடங்குகளை சுற்றுச்சூழல் பாதிக்காத வண்ணம் அறிவியல் சார் முறையில் மூடும் பணிகளையும் முடித்துள்ளனர். மேலும் வெள்ளலூர் பகுதியில் நவீன உரக்கிடங்கு நிறுவுதல் மற்றும் சுகாதாரக் கட்டமைப்பு நிறுவுதல் போன்ற பணிகளையும் முடித்துள்ளனர்.

பகுதி II ன் பணியினை தனியார் பங்களிப்புடன் செய்து வரும் பணியில் வெள்ளலூர் பகுதியில் ஏற்கனவே 2003-ம் ஆண்டு முதல் 2006-ம் ஆண்டு இறுதி வரை கொட்டப்பட்டிருந்த சுமார் 3.36 இலட்சம் கன.மீட்டர் கொள்ளளவு கொண்ட குப்பைகளை மட்டும் சுற்றுச்சூழல் பாதிக்காத வண்ணம் அறிவியல் சார் முறையில் மூடும் பணிக்கு ரூ.5.52 கோடியில் மேற்கொள்ள திட்டமதிப்பீட்டில் அனுமதி பெறப்பட்டுள்ளது. 01-01-2007 முதல் 31-03-2011 வரையில் தினசரி மாநகராட்சியில் சேகரமாகும் திடக்கழிவுகளை வெள்ளலூர் குப்பைகிடங்கிற்கு கொண்டு சென்று சேகரித்து வைக்கப்பட்டதின் அளவினை கணக்கிடப்பட்டதில், அத்திடக்கழிவுகளின் கொள்ளளவு 5.18 இலட்சம் கன.மீட்டர் சேகரம் ஆகுமென கணக்கீடு செய்யப்பட்டு அரசினா் பொறியியல் கல்லூரி பொறியாளர்களால் சரிபார்க்கப்பட்டுள்ளது.. மேற்குறிப்பிடப்பட்டுள்ள கூடுதல் திடக்கழிவுகள் குப்பை கிடங்கில் கொட்டப்பட்டு வருவதால் அடிக்கடி தீப்பற்றி எரிவதாலும், அக்குப்பைகளிலிருந்து வெளியேறும் புகையினால் வெள்ளலூர் மற்றும் குறிச்சி பகுதிகளில் சுற்றுச்சூழல் மாசுப்படுவதை கருத்திற்க் கொண்டு திட்டமதிப்பீட்டில் ஒப்புதல் பெறப்பட்ட கொள்ளவிற்கும் 2007-ம் ஆண்டிலிருந்து கூடுதலாக கொட்டப்பட்டு வரும் திடக்கழிவுகளை ஏற்கனவே கொட்டப்பட்டிருந்த திடக்கழிவுகளுடன் சேர்த்து சுற்றுச்சூழல் பாதிக்காத வண்ணம் அறிவியல் சார் முறையில் மூடவும் அதற்காகும் கூடுதல செலவினம் குறித்து ஆலோசகர், CPHEEO, மத்திய நகர்புற மேம்பாட்டு அமைச்சகம், புதுடெல்லி அவர்களை கடந்த 23-07-2008 தேதியிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டு அதற்கான நிதி கோரப்பட்டது. ஆலோசகர், CPHEEO, மத்திய நகர்புர மேம்பாட்டு அமைச்சகம், புதுடெல்லி அவர்கள் No.Q-12045/23/1/NURM/2006-CPHEEO நாள் 14-08-2008 தேதியிட்ட கடிதத்தில் மேற்படி பணிக்கு அனுமதி வழுங்கியதுடன் அதற்காகும் கூடுதல் செலவினத்தை மாநகராட்சியின் சொந்த நிதியிலிருந்து மேற்கொள்ள ஒப்புதல் அளித்துள்ளது.

வெள்ளலூர் பகுதியில் ஏற்கனவே கொட்டப்பட்டிருந்த திடக்கழிவுகளுடன் சேர்த்து தற்சமயம் கூடுதலாக கொட்டப்பட்டுவரும் திடக்கழிவுகளின் மொத்த அளவு 8.54 இலட்சம் கன.மீட்டர் என்பதால் குப்பைகளை சுற்றுச்சூழல் பாதிக்காத வண்ணம் அறிவியல் சார் முறையில் மூடும் பணிக்கு ஆகும் கூடுதல் செலவினம் ரூ.7.07 கோடி ஆகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்திற்கென ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட திட்டமதிப்பீடு ரூ.96.51 கோடியில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் நிறைவுற்று எஞ்சியுள்ள தொகை, கைவிடப்பட்ட சில பணிகளின் மதிப்பீட்டுத் தொகை மற்றும் திட்டமதிப்பீட்டில் எதிர்பாரா இனங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை போன்றவைகளால் ரூ.7.11 கோடி நிதி தற்சமயம் இருப்பில் உள்ளது.

எனவே வெள்ளலூர் பகுதியில் ஏற்கனவே கொட்டப்பட்டிருந்த குப்பைகளுடன் 31-03-2011-ம் ஆண்டு வரையில் கூடுதலாக கொட்டப்பட்டுவரும் குப்பைகளை சுற்றுச்சூழல் பாதிக்காத வண்ணம் அறிவியல் சார் முறையில் மூடும் பணிக்கு ஆகும் கூடுதல் செலவினம் ரூ.7.07 கோடியினை திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்திற்கென ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட திட்டமதிப்பீடு தொகையில் மிதமுள்ள தொகையான ரூ,7.11 கோடியில் மேற்கொள்ளவும் அதற்கான அனுமதியினை மத்திய நகர்புர மேம்பாட்டு அமைச்சகம், புதுடெல்லியிடம் பெற பிரேரணையினை அனுப்பி வைத்து உத்திரவு பெறவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண் :13087/2006/(எம்.டி3)ஜே.என்3

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 249 நாள் 18.02.2011</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

கடந்த 05.01.2011 அன்று நடைபெற்ற மாமன்ற சாதாரணக் கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு மீண்டும் சமர்பிக்கப்படுகிறது.

## பொருள் எண் 7

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் - காந்திபுரம் 8ம் நம்பர் - சீனிவாசபுரம் தினசரி காய்கறி மற்றும் மாமிச அங்காடியில் தினசரி வசூல் செய்வதை மாத வாடகையாக மாற்றுவது தொடர்பாக.

--------

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்தில் சீனிவாசபுரத்தில் (4x4சதுரடி) அளவுள்ள 124 தினசரி காய்கறி கடைகள் மற்றும் 24 மாமிச கடைகளுக்கு தினசரி வாடகையாக கடை ஒன்றுக்கு ரூ.20/- வீதம் கடைகளில் அலுவலக பணியாளர் மூலமாக வசூல் செய்து வடக்கு மண்டல கருவூலத்தில் செலுத்தப்பட்டுவருகிறது.

மேற்படி தினசரி வாடகையை மாத வாடகையாக கணக்கிட்டு கடை ஒதுக்கீட்டுதாரர்கள் பெயரில் மாதம் ஒரு முறை மாதவாடகையாக அவர்களே வடக்கு மண்டல கருவூலத்தில் 10ம் தேதிக்குள்ளாக ரொக்கமாகவோ/ பணவிடை மூலமாகவோ/ காசோலைமூலமாகவோ செலுத்தவும் அவ்வாறு செலுத்த தவறும் பட்சத்தில் வாடகை கட்டணம் செலுத்துகின்ற நாள் வரை 18%அபராத தொகையுடன் வாடகை கட்டணம் வசூலிக்கவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் 15.12.10-ம் தேதிய தீர்மான எண்.88-ல் தினசரி காய்கறி கடைகள் மற்றும் மாமிச கடைகளுக்கு வாடகை உயர்வு செய்து 5 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்ட காரணத்தால் தினசரி வாடகையாக ரூ. 25 நிர்ணயம் செய்யவும், மாதாந்திர அடிப்படையில் வாடகை வசூல் செய்யவும் மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து ஒப்புதல் அளித்து தீர்மானித்துள்ளதை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்: 13628/2010/அ7(வ)

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 250 நாள் 18.02.2011</u>

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண். 88 நாள் 15.12.10 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

கடந்த 05.01.2011 அன்று நடைபெற்ற மாமன்ற சாதாரணக் கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு மீண்டும் சமர்பிக்கப்படுகிறது.

## பொருள் எண் 8

பார்வை : வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 113, நாள் 04.01.2011

-----------

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள தியாகி குமரன் மார்க்கெட்டின் மத்தியில் ராஜவீதி முதல் பெரிய கடைவீதி வரையில் இருசக்கர வாகன நிறுத்துமிடம் இருந்து வந்தது. இது தெற்கு மண்டல வருடாந்திர குத்தகை இனத்தில் 2008 – 2009 வரையில் இருந்து வந்தது.

மேலும் அந்த வார்டின் மாமன்ற உறுப்பினரின் கோரிக்கையின் அடிப்படையில் மாமன்ற தீர்மானம் எண் 317, நாள் 24.12.08 படி மேற்படி குத்தகை இனம் நீக்கப்பட்டது.

தற்போது மேற்படி இடத்தில் நிறுத்தப்படும் இரு சக்கர வாகனங்களுக்கு கட்டணம் ஏதும் வசூலிக்கப்படுவதில்லை. இதனால் இங்கு நிறுத்தப்படும் வாகனங்களுக்கு எந்தவித பாதுகாப்பும் இல்லாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் அந்த இடத்தில் இருசக்கர வாகன நிறுத்துமிடம் அகற்றப்பட்டதால் மாநகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது. எனவே இங்கு இருசக்கர வாகன நிறுத்துமிடம் செயல்படுத்துவதால் அங்கு நிறுத்தப்படும் இருசக்கர வாகனங்களுக்கு பாதுகாப்பு கிடைக்கும் என்கிற காரணத்தாலும் இதனால் மாநகராட்சிக்கு வருமானம் கிடைக்க வாய்ப்பு உள்ள காரணத்தாலும் மேற்படி தியாகி குமரன் மார்க்கெட் மத்தியில் இருசக்கர வாகன நிறுத்துமிடமான குத்தகை இனத்தை, மாநகராட்சியில் உள்ள இதர இருசக்கர வாகன நிறுத்துமிடத்திற்கான ஏல நிபந்தனைகளின்படி குத்தகை விடுவது குறித்து முடிவு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் பார்வையில் கண்ட வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 113, நாள் 04.01.2011ல் அனுமதி அளித்துள்ளது.

எனவே மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்.19356 /09 /அ1(தெ)

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 251 நாள் 18.02.2011</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 9

கோவை மாநகராட்சி பில்லூர் IIவது குடிநீர் திட்டத்தில் பில்லூர் டேம் பகுதியில் கட்டப்பட்டு வரும் நீர் சேகரிப்பு கிணறு பணி மற்றும் நீரேற்று பம்பிங் மெயின், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒப்படைக்கப்பட்டு இப்பணிகள் கடந்த ஆகஸ்டு மாதம் 2010ல் துவங்கப்பட்டு இப்பணிகள் 2011ம் ஆண்டு ஜீன் மாத இறுதிக்குள் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில் வரும் கோடை காலத்தில் குடிநீர் பற்றாக்குறையினை சமாளிக்கும் வகையிலும், தற்போதுள்ள சிறுவாணி அணையில் இருப்பில் உள்ள நீர் அளவினை கொண்டு கணக்கிடப்பட்டதில் கோடை காலத்தில் மாநகராட்சிக்கு சிறுவாணி குடிநீர் நிர்ணயிக்கப்பட்ட அளவினை விட குறைவாக குடிநீர் கிடைக்க வாய்ப்பு உள்ளதாக அறியப்பட்டு, குடிநீர் பற்றாகுறையினை சமாளிக்கும் வகையில் கோவை மாநகராட்சிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மாநகராட்சிக்கு பில்லூர் I குடிநீர் திட்டத்திலிருந்து தற்போது வழங்கப்பட்டு வரும் குடிநீர் கொள்ளளவிலான 62.00 எம்.எல்.டி குடிநீருடன் கூடுதலாக குடிநீர் கிடைக்க பெறும் வகையில், தற்காலிகமாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் பில்லூர் I குடிநீர் திட்ட தலைமை நீரேற்று நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள மாற்று பம்பு மோட்டார் செட்டினை (Stand by pumpsets) கூடுதலாக இயக்கி கூடுதல் கொள்ளளவு நீர் புதியதாக மாநகராட்சியால் கட்டப்பட்டு வரும் நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு வழங்க இயலுமா என்பது குறித்து கடந்த 08.02.2011–ல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைமை பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர்களுடன் கூட்டாய்வு செய்யப்பட்டது.

ஆய்வின் அடிப்படையில் 20 முதல் 40 எம்.எல்.டி வரையிலான கொள்ளளவு நீர் தலைமை குடிநீர் நிலையத்திலிருந்து (பில்லூர் I ) மாற்று பம்பு செட் மோட்டாரினை இயக்கி பெற இயலுமென அறியப்பட்டதால், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய உயர்மட்ட அனுமதி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்காக தேவைப்படும் மின்சாரம் தமிழ்நாடு மின்சார வாரியத்திடமிருந்து பெறவும் மற்றும் பம்பு அறையில் செய்யப்படவேண்டிய கூடுதல் பணிக்கான தொகையினை மாநகராட்சி செலுத்தப்பட வேண்டுமென ஆய்வின்போது முடிவு எடுக்கப்பட்டது.

அதன்பேரில் தமிழ்நாடு மின்சார வாரியத்திடமிருந்து கேட்பு பெறப்பட்டதில் கூடுதல் பம்புசெட்டுகளை இயக்க தேவைப்படும் 335 KVA கூடுதல் மின் சப்ளைக்கான முன் வைப்புத் தொகையாக 1 KVA-க்கு ரூ. 800 வீதம் 335 KVA-க்கு தொகை ரூ. 2,68,000/– மற்றும் பதிவுக் கட்டணம் ரூ. 500/–ம் செலுத்தவும், கூடுதல் மின் இணைப்பு அனுமதி கிடைத்த பிறகு அதற்கான அபிவிருத்திக் கட்டணம் 1 KVA–க்கு 350 வீதம் 335 KVA-க்குண்டான தொகை ரூ.1,17,250/– செலுத்தவும், மேற்படி தொகையினை கண்காணிப்புப் பொறியாளர், CEDC/NORTH, கோவை அவர்கள் பெயருக்கு மாநகராட்சி மூலம் செலுத்த வேண்டி செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கோவை அவர்களிடமிருந்து கடிதம் பெறப்பட்டுள்ளது.

மேலும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கூடுதல் மின்சக்தி பெற செலுத்த வேண்டிய தொகை போக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மின் இணைப்பு பெற, தலைமை நீரேற்று நிலைய பவர் அறையில் (Power House) உயர் அழுத்த மின் இணைப்பு பேனல் மற்றும் நடுத்தர மின்அழுத்த மின் இணைப்பு பேனல் போர்டினை மாற்றம் செய்யவும் அதற்கான தொகையான ரூ. 3,05,730/– ஐ தமிழ்நாடு குடிநீர் வாரியத்திற்கு செலுத்தவும் செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வாரியம் தனது கடித எண் F.Corporation/JDO2/DB/2010-11 நாள். 08.02.2011ல் கோரியுள்ளார்.

இதுதவிர இராமகிருஷ்ணாபுரத்தில் உள்ள பில்லூர் I குடிநீர் திட்டத்தில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து பில்லூர் II வது குடிநீர் திட்டம் முழுமையாக இயக்கப்படும் வரையில் பொதுமக்களுக்கு விநியோகம் செய்ய பதிக்கப்பட வேண்டிய பைபாஸ் மெயினில் பொருத்தப்படவுள்ள மாநகராட்சிக்கு தேவைப்படும் 700 எம்.எம் D/F CI சுலிஸ் வால்வு ஒன்று தற்போது மாநகராட்சி வசம் இல்லாததால், தமிழ்நாடு குடிநீர் வாரியத்திடம் கேட்கப்பட்டதில் அவர்களிடமுள்ள சுலிஸ் வால்வினை வழங்கவும், அதற்கான தொகையான ரூ.1,61,353/–ஐ தமிழ்நாடு குடிநீர் வாரியத்திற்கு செலுத்தவும் செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வாரியம் தனது கடித எண். DB/JDO1/F.JNNURM/2010 நாள். 08.02.2011ல் கோரியுள்ளார். எனவே, கூடுதல் குடிநீர் பெற தேவையான கூடுதல் மின்இணைப்பினை தமிழ்நாடு மின்சார வாரியத்திடமிருந்து பெற தேவையான தொகையினை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்தவும், பேனல் போர்டு மாற்றம் செய்ய செலுத்தப்பட வேண்டிய தொகை மற்றும் மாநகராட்சிக்கு தேவைப்படும் 700 மி.மீ. சுலிஸ் வால்விற்குண்டான தொகையினை தமிழ்நாடு குடிநீர் வாரியத்திற்கு செலுத்தி பணியினை மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம். ந.க.எண்: 5656/09/ஜே.என்5

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 252 நாள் 18.02.2011</u>

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

பொருள் எண் 10

கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் சிறுவாணி மற்றும் பில்லூர் குடிநீர் திட்டங்களான இரு குடிநீர் திட்டங்களிலிருந்து தினசரி கிடைக்கப்பெறவுள்ள 200 மில்லியன் லிட்டர் கொள்ளளவு குடிநீரினை கொண்டு, 24 மணி நேரமும் தங்கு தடையின்றி, சீரான குடிநீர் அனைத்து மாநகர பகுதி மக்களுக்கும் வழங்கும் பொருட்டு ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்தின்கீழ் 24x7 குடிநீர் விநியோக திட்டம் செயல்படுத்தவும், அதற்கான விரிவான திட்ட அறிக்கையினை தயாரிக்க குறைந்தபட்ச தொகையினை குறிப்பிட்ட தொழில்நுட்ப கலந்தாலோசக நிறுவனமான மெஸ்ஸர்ஸ பிட்சனர் கன்சல்ட்டிங் இன்ஜினியர்ஸ் (இந்தியா) பிரைவேட். லிமிடெட், சென்னை என்ற நிறுவனம் மாமன்ற தீர்மானம் எண் 175 நாள் 29.08.08–ன்படி நியமனம் செய்யப்பட்டு மேற்படி நிறுவனத்திற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ரூ.59,67,450/– வழங்கவும் தீர்மானிக்கப்பட்டு 08.09.08–ல் பணி உத்தரவு வழங்கப்பட்டது.

மேற்படி நிறுவனம் தயாரித்து முழுமையாக வழங்கிய விரிவான திட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள மற்றும் தேர்வு செய்யப்பட்டுள்ள பிரதான மற்றும் விநியோகக் குழாய்கள் கடந்த 15.09.2010–ல் முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்கள் தலைமையில் சென்னை பெருநகர் குடிநீர் மற்றும் கழிவுநீர் வடிகால் வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைமைப் பொறியாளர்கள் தெரிவித்துள்ள ஆலோசனை மற்றும் பரிந்துரைகளின்படி திட்ட அறிக்கையில் கூடுதல் மற்றும் பிற திருத்தங்களை செய்து மீண்டும் திருத்திய திட்ட அறிக்கை தயாரிக்க கேட்டுக்கொண்டதின்பேரில், இத்திருத்தங்கள் செய்ய மேலும் கூடுதலாக ரூ. 15,00,000/– வழங்கப்பட வேண்டி மேற்படி நிறுவனம் தனது 07.12.2010–ந் தேதிய கடிதத்தில் தெரிவித்தது.

கோயம்புத்தூர் மாநகராட்சி தனது 21.01.2011–ந் தேதிய கடிதத்தில் தொழில்நுட்ப கலந்தாலோசக நிறுவனத்தினை விலை குறைப்பு செய்து தருமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க அந்நிறுவனம் தனது 31.01.2011 தேதிய கடிதத்தில் ரூ. 14,90,000/–க்கு விலை குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளது. இது குறித்து கடந்த 31.01.2011 அன்று நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களது அலுவலகத்தில் தலைமைப் பொறியாளர் மற்றும் தொழில்நுட்ப கலந்தாலோசக நிறுவனத்தினருடன் நடைபெற்ற கூட்டத்தில் திருத்திய திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான கூடுதல் செலவினம் செலவழிப்பது குறித்து நடைபெற்ற கூட்டத்தில், இக்கூடுதல் பணியினை மேற்படி நிறுவனம் மூலமாகவே மேற்கொள்ளவும், கூடுதல் செலவுத் தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாநகராட்சி மாமன்றக் கூட்டத்தில் ஒப்புதல் பெற்று பணியினை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது.

எனவே மெஸ்ஸர்ஸ் பிட்சனர் கன்சல்ட்டிங் இன்ஜினியர்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், சென்னை நிறுவனம் தயாரித்து வழங்கிய விரிவான திட்ட அறிக்கையினை கடந்த 15.09.2010–ல் மாநில அளவிலான தொழில்நுட்ப கமிட்டி பரிந்துரைகளின்படி திருத்திய திட்ட அறிக்கை தயாரிக்க வழங்கப்பட வேண்டி கூடுதல் தொகை ரூ.14,90,000/–ஐ மேற்படி நிறுவனத்திற்கு வழங்கி திருத்திய திட்ட அறிக்கையினை தயாரிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u> 24x7 குடிநீர் விநியோக திட்டம் செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயாரித்து வழங்கிய தொழில்நுட்ப கலந்தாலோசக நிறுவனமான மெஸ்ஸர்ஸ பிட்சனர் கன்சல்ட்டிங் இன்ஜினியர்ஸ் (இந்தியா) பிரைவேட். லிமிடெட், சென்னை என்ற நிறுவனத்திற்கு கூடுதல் திருத்தங்கள் செய்து திருத்திய விரிவான திட்ட அறிக்கை தயாரித்து வழங்க மேற்படி நிறுவனம் கோரியுள்ள கூடுதல் தொழில்நுட்ப கலந்தாலோசக கட்டணம் ரூ.14,90,000/– வழங்கவும், இச்செலவினை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவழிக்கவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: 2896/08/ஜே.என்5

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 253 நாள் 18.02.2011</u>

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி